
# திராவிடத்தால் வாழ்கிறோம்

974

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

30

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.



படங்கள் உதவி : ஞானம்

# காஞ்சித் தலைவன்; படைமுகத்துப் பெருவீரன்!

*கலைஞர் கதை வசனம் எழுதிய திரைப் படங்களில் 'காஞ்சித் தலைவன்' தனித்துவமான கதையம்சம் கொண்ட ஒரு படம். தமிழ் - மொழி, இனம், நாடு, கலை, இலக்கியம், பண்பாடு (காதல், வீரம், சமய நல்லிணக்கம்) ஆகியவற்றைப் போற்றுவதற்காகவும், பேரறிஞர் அண்ணா புகழ் பாடுவதற்காகவும் கலைஞர், கதை வசனத்துடன் ஒரு பாடலையும் எழுதி, தானே தயாரித்த படம்தான் 'காஞ்சித் தலைவன்'.*

*தனது தலைவர் பேரறிஞர் அண்ணாவுக்காக, கட்டியம்கூறும் பல வசனங்களால் 'காஞ்சித் தலைவன்' படத்தைப் படைத்திருப்பார் கலைஞர். நரசிம்ம பல்லவன் தனது அரசவைக்கு வரும் காட்சியில், படைவீரன் இவ்வாறு கட்டியம் கூறுகிறான்...*

***வீரன்:*** *பகை முடித்து, நகை முழக்கும் படை முகத்துப் பெருவீரன். நாட்டுக்கு மன்னன், நல்லோர்க்கு அண்ணன் காஞ்சித் தலைவன் நரசிம்ம பல்லவர் வருகை... வருகை... வருகை என்று உரைப்பதாகக் கலைஞர் வசனம் எழுதியுள்ளார். இப்படியொரு கட்டியம்கூறல் எந்த ஒரு மன்னரின் அரசவையிலும் இருந்திருக்காது.*

### அரசவையில் பௌத்தம்

*அரசவையில் சைவ வைணவ அடையாளங்களுடன் இருவர் வீற்றிருப்பர். அவர்களுக்கு அருகே பௌத்தப் பிக்கு ஒருவரும் அமர்ந்து இருப்பபார். இப்படி மத ஒற்றுமையையும், சமயப் பூசல்களுக்கு எதிரான வசனங்களையும் கலைஞர் இத்திரைப்படத்தில் எழுதி இருப்பார்.*

***புலிகேசி:*** *ஹ்ஹஹாஹா... காதல் காட்சியல்ல. காஞ்சி மன்னனை அடிமைப்படுத்தும் சாகசக் கட்டம். பூவிக்கிரமா நரசிம்மனுக்கும் சோழ குமாரிக்கும் திருமணம் நடக்கப்போகிறது என்ற செய்திகூட தேசம் எங்கும் தீப்பொறி போல பரவ வேண்டும். அந்தச் செய்தி பரவினால், பல்லவனுக்குப் பெண் கொடுக்கத் துடித்துக் கொண்டிருக்கும் கொள்ளிடக்கரை மன்னர் முத்தரையர், பல்லவனின் எதிரியாக மாறுவார். ஹா.... காஞ்சிபுரம்...ஹ்ஹா.....தன் பலமான கைகளில் ஒன்றை இழக்கும்.*

***பூவிக்கிரமன் :*** *எந்தக் கை போனாலும் சொந்தக் கையில் வாழும் தலைவன்.*

***புலிகேசி:*** *அந்தக் கையை முறிக்கத்தானே, நீயும் சோழ குமாரியும் இருக்கிறீர்கள். இதோ பார் பூவிக்கிரமா, திருமணக் குழப்பம், திருநாவுக்கரசருக்கும் திருமழிசை ஆழ்வாருக்கும் சைவ வைணவக் குழப்பம், சமண பவுத்த மதக் குழப்பம் இப்படி நாடெங்கும் குழப்பம்... குழப்பம்... குழப்பம்.*

***பூவிக்கிரமன் :*** *முடியாது என்ற வார்த்தையை அழித்து விட்டுப் பிறந்தவன் நான். அரசே, காஞ்சிபுரத்தின் கதவுகளைத் திறந்து வைக்கிறேன். உங்கள் கால்கள் எடுத்து வைக்கும் முதலடி பல்லவன் மணிமுடி.*



***புலிகேசி :*** *சபாஷ் பூவிக்கிரமா சபாஷ்.*

*புலிகேசி மன்னனின் ஆணைப்படி பூவிக்கிரமன் சைவ சமய சாமியார் வேடமிட்டு, சைவ மடத்திற்குள் நுழைந்து மதப்பூசலை உருவாக்க முனைகிறான். அப்போது சைவ சமயத் தலைவரான திருநாவுக்கரசர் இப்படிக் கூறுவதாகக் கலைஞர் வசனம் எழுதியுள்ளார்...*

***திருநாவுக்கரசர்:*** *பல்லவ நாட்டில் மதப்பூசலா? எம்மதமும் சம்மதமே என நாடாளும் நரசிம்ம வர்மன் திருநகரில் சமயப் போராட்டமா? அந்தணரே, இவரைப் பார்க்கச் சமயச் சான்றோராகத் தெரியவில்லை. இவர் நமது மடத்தில் தங்குவதென்பது நல்லதல்ல.*

*மடத்தினர், 'உடனே வெளியேறுங்கள்' எனக் குரல் எழுப்புகின்றனர். அதேபோல பூவிக்கிரமனின் உதவியாளன் சூடாமணி (எஸ்.ராமாராவ்) புத்த மதத் துறவி போல வேடமிட்டு பவுத்த மடத்தலைவரைச் சந்தித்து மதப்பூசலை உருவாக்க முனைகிறான்.*



> "கருத்தாழமிக்க உரையாடல்களால் பார்வையாளர்களைக் கட்டிப்போட்ட படங்களில் காஞ்சித் தலைவனுக்குச் சிறப்பான இடமுண்டு."

*அப்போது...*

***பவுத்த மதத் தலைவர்:*** *தம்பி இவ்விடத்தில் அன்புக்குத்தான் இடம், வம்புக்கல்ல. பார், ஒளி வீசும் புத்தர் முகத்தைப்பார். சபையோரே இவன் புத்தரின் துரோகி, பித்தனின் தோழன். இங்கு இவன் இருந்தால், புத்தவிகார் களங்கமாகிவிடும். தம்பி, நீயே வெளியேறிவிடு... என்று கூறுகிறார்.*

*ஆனாலும், மக்களிடையே பூவிக்கிரமனின் ஆட்கள் மதக்கலவரத்தைத் தூண்டி விட்டுவிடுகின்றனர். மக்கள் வீதியில் இறங்கி, மதச் சண்டையில் ஈடுபடுகின்றனர். அப்போது அவர்களிடையே தளபதி பரஞ்சோதி தோன்றி, பேசும் வசனமாகக் கலைஞர் இவ்வாறு எழுதுகிறார்...*

### ஆயிரம் பேதங்கள்; அல்லல்கள்

***பரஞ்சோதி:*** *நிறுத்துங்கள். ஏனய்யா ஆயிரம் பேதங்கள், அல்லல்கள், அமளிகள். அவரவர் மதத்தை அவரவர் போற்றிப் புகழ்வதுதானே? எதற்காக மற்றவர் மதத்தில் தலையிட்டு, ரகளையில் ஈடுபடுகிறீர்கள்? என்று பரஞ்சோதி மக்களை நோக்கிக் கேட்பதாக எழுதுகிறார். கலைஞரின் இந்த வசனங்கள் இன்றைக்கும் இந்துத்துவ மதவெறி பரப்பப்படும் சூழலில், மிகவும் பொருத்தப்பாடு உடையதாக உள்ளது.*

***நாசிம்மன்:*** *மதவாதம், சமய பேதம், அதனால் நாட்டில் ஏற்படும் அமளி, பரஞ்சோதி இந்த விடயத்தை விளையாட்டாக விடக்கூடாது உடனே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

***பரஞ்சோதி:*** *மதவாதிகளால் ஏற்படும் குழப்பம் மட்டுமல்ல. நம் மீது மரியாதை கொண்டிருக்கும் மன்னர்களாலும் பெரும் குழப்பம் விளைய இருக்கிறது வேந்தே.*

*இக்காட்சியில் நாடா, காதலா? என்கிற எதிர்ப்பைக் கட்டமைத்து, கலைஞர் மிக அற்புதமான வசனத்தை எழுதி இருப்பார். படைத்தலைவன் பரஞ்சோதியாக நடித்துள்ள எஸ்.எஸ்.ஆர். நாட்டு நலனையே பெரிதென மதிக்கும் கொள்கை வீரராக கலைஞரின் வசனத்தை மிகச்சிறப்பாகப் பேசி நடித்துள்ளார். நரசிம்மவர்மன் வேடமேற்றுள்ள எம்.ஜி.ஆர். மிக நிதானமான, தலைமைப் பண்பு மிக்க கதாநாயகனாக சித்தரிக்கப்பட்டு அருமையாக நடித்திருப்பார். கருத்தாழமிக்க உரையாடல்களால் பார்வையாளர்களைக் கட்டிப்போட்ட படங்களில் காஞ்சித் தலைவனுக்குச் சிறப்பான இடமுண்டு..*

**...காட்சி விரியும்**

## வானம் வசப்பட்டது, திராவிட மாடலால்!

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமாக, 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சியை, தமிழ்நாடு அரசு சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் நடத்தியது. திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெற்ற ஏழை, எளிய மாணவர்களின் நெகிழ்ச்சியான உரைகள் பெரும் கவனம் ஈர்த்தன.

நிகழ்ச்சியில், பார்வையாளராகக் கலந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் தனது முகநூல் பக்கத்தில் எழுதியுள்ள பதிவில், "சில மாதங்களுக்கு முன், பள்ளிக் கல்வித்துறை பள்ளி மாணவ மாணவியருக்காக ஒரு முகாமை நடத்தியது. அதில் ஒரு நாள் இதழியல் குறித்து, அவர்களுடன் ஒரு மணி நேரத்திற்கும் மேல் உரையாடினேன். கல்லக்குடியில் ஒரு நடுநிலைப் பள்ளியில் படித்தது முதல், டெல்லியில் இருக்கும் Indian Institute of Mass Communication வரையிலான என் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன். தமிழ் மீடியத்தில் படித்த நான், ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிய முடிந்தது எப்படி, இதழியல் துறை மட்டுமின்றி, பிற துறைகளிலும் முன்னேற, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரிந்தவற்றைச் சொன்னேன்.

நிறைய கேள்விகள் கேட்டனர். கேட்டவர்கள் பெரும்பாலும், பெண் குழந்தைகள். உரையாடலுக்குப் பின் உணவருந்தும் போது எனக்கு அருகில் இருந்த மாணவியிடம் நான், 'எந்த ஊர்' என்றேன். 'அரியலூர்' என்றாள்.

அப்பா என்ன செய்கிறார்?

ஆடு மேய்க்கிறார்.

ஒரு கணம் உறைந்து போனேன்.

'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்வில் இத்தகைய மாணவிகள் பலர் அவ்வளவு பெரிய கூட்டத்திற்கு முன் தெளிவாகவும், துணிச்சலாகவும் பொறுப்புணர்வுடன் பேசியபோது, அந்தப் பெண்ணை நினைத்துக் கொண்டேன். அவளும் ஒரு நாள் மலேசியா, நியூயார்க், தைவான் என்று ஏதாவது ஒரு நாட்டில் படிக்கப் போகக் கூடும். ஜப்பானிய மொழியில் பேசி அசத்தக் கூடும். சைக்கிள் கூட இல்லாமல் பள்ளிக்குச் சென்ற மாணவன் அந்த திருவண்ணாமலை மாணவன்போல் விமானத்தில் வெளிநாடு சென்று படிக்கக் கூடும்.

வானம் வசப்படும்! காத்திருப்போம்!" என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரின் பெருமைகளை எழுதுவதே என் பணி!



புலவர். முத்து வாவாசி

1996 -2001 காலகட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மக்கள் தொடர்பு அலுவலராகவும், 2006 -2011 ஆண்டுகளில் கலைஞரின் சிறப்பு உதவியாளராகவும் பணியாற்றினேன். 2014-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எனது பெயர்த்தி நித்திலா பிறந்த நாளின்போது தலைவர் அவர்களிடம் வாழ்த்துப்பெற எனது துணைவியார் புஷ்பம், மகன் கலைமணி, மருமகள் சண்முகவள்ளி என குடும்பத்தினருடன் சென்றிருந்தேன். அண்ணன் சண்முகநாதன் அவர்களும் படத்தில் உள்ளார். தலைவர் கலைஞரின் பெருமைகளை எழுதுவதையே, இப்போதும் என் தலையாய பணியாகச் செய்து வருகிறேன்..

**– புலவர். முத்து வாவாசி, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறப்பு உதவியாளர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மீண்டும் மேலவை தீர்மானம்!

1989 -ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி அமைந்த உடன், 1989 பிப்ரவரி 20ஆம் தேதி மீண்டும் மேலவை கொண்டுவரப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை விதி முறைகள் அனைத்தையும் மேற்கொண்டு சட்டமன்றத்தில் கொண்டு வந்தார் கலைஞர். அதற்கு முன் மேலவை கலைக்கப்பட்ட விவரங்களை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதையும் எடுத்துக் கூறி நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுத்தார் கலைஞர். ஆனால் பல காரணங்களால் அது நடைபெறவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131